සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(I)

காலம் - 03 மணித்தியாலங்கள்

## அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் 04

විභාග අංකය
Index No / சுட்டெண் ....................................

- ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

---

1. i. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியமனம், பதவி வெறிதாதல் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் விபரிக்க. (15 புள்ளிகள்)

   ii. “எதிர்பாரா செலவு நிதியம்” தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

2. i. நிதி ஒழுங்கு விதி 237 பிரகாரம் கொடுப்பனவு செய்யும் போது விசேட அத்தாட்சிப்பத்திரங்கள் (Special Certificates) அவசியப்படும் சந்தர்ப்பங்கள் நான்கை (04) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   ii. 2020/08/28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல.01/2020 மற்றும் நிதி ஒழுங்கு விதி 371 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரொருவரால் வழங்க முடியுமான உப கட்டு நிதி வகைகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

3. i. அரசாங்கத் திணைக்களமொன்றின் செலவினத் தலைப்பொன்றுக்கு வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் அனுமதிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பற்றாக்குறையாக உள்ள சந்தர்ப்பத்தில் மேலதிக நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான முறைகளை சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

   ii. நிதி ஒழுங்கு விதி 136 பிரகாரம் “அனுமதியளித்தல்” (Authority)” எனும் விடயத்தை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

4. i. நிதி ஒழுங்கு விதி 141 பிரகாரம் காசோலைக்கு இரண்டாவதாக கையொப்பமிடுபவரின் பொறுப்புக்கள் நான்கினை (04) சுருக்கமாக விபரிக்க. (10 புள்ளிகள்)

   ii. 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டு நெறிக் கோவைக்கு அமைய அரசாங்க நிறுவனமொன்றில் பயன்படுத்தப்படும் பெறுகை முறைகள் நான்கினை (04) குறிப்பிட்டு, அதில் ஒரு முறையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

5. i. 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டு நெறிக் கோவைக்கு அமைய "மீள் கொள்வனவு உத்தரவைப்" (Repeat Order)" பயன்படுத்த முடியுமான சந்தர்ப்பங்கள் தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ii. பெறுகை வழிகாட்டு நெறிக் கோவைக்கு அமைய நியமிக்கப்படும் பல்வேறுபட்ட பெறுகைக் குழுக்களைப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

iii. பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் 3.11, க்கு அமைய இரட்டைக் கடிதவுறை முறையை (Two Envelop System) சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

6. பின்வரும் விடயங்கள் தொடர்பில் சுருக்கமாக விளக்குக.

i. மொத்தச் செலவு மதிப்பீடு (Total Cost Estimate)

ii. அரசாங்க முற்பணக் கணக்குகளின் எல்லைகள்

iii. திறைசேரிக் குறிப்புகள் (Treasury Notes)

iv. இடைக்கால வாக்குப்பண கணக்கு (புள்ளிகள் 5×4 = 20)

************